From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 162/2021

Deposition of witness for: PW - 11

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆனந்த தாண்டவம் | Father/Husband Name | : அண்ணாமலை |
| Age | : | Calling | : |
| Date | : 18.11.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 18 day of 11.2025.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது தாம்பரம் மாநகர காவல் ஆணையத்தில் தலைமையிடத்து காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 08.02.2022ம் தேதி மதுரை மாவட்டம் ஒத்தக்கடை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது உதவி ஆய்வாளர் திருமதி.ஜெயலட்சுமி என்பவர் நிலைய குற்ற எண் 481/2021 பிரிவு 454, 380 இதசவில் பதிவு செய்யப்பட்டிருந்த வழக்க கோப்பினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 09.08.2021ம் தேதி காலை 11.00 மணிக்கு ஒத்தக்கடை – திருவாதவூர் செல்லும் சாலை காளிகாப்பான் பிரிவில் பெண் காவலுருடன் கூடிய போலீஸ் பார்ட்டியுடன் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது ராஜா என்ற நாகராஜ், மற்றும் சாந்தி என்ற சாந்தா ஆகியோர்களை விசாரணை செய்ய எங்கள் பெயரை கூறியவர்களிடம் விசாரித்தபோது இந்த வழக்கில் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதை ஒப்புக்கொண்டார்கள், அதன்பேரில் அவர்களை காரணம் கூறி கைது செய்தும், 13.00 மணிக்கு 1ம் எதிரி ராஜா என்ற நாகராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் விக்னேஷ் மற்றும் ராஜா

முன்னிலையில் மடிக்கணிணியில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிகள் ஒத்தக்கடை காவல் நிலைய குற்ற எண்களான 65/2021, 412/2021, 1227/20, 481/2021 ஆகிய குற்ற வழக்கில் சம்மந்தப்பட்டதாக தானாக வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அதேதேதியில் 13.00 மணிக்கு 1ம் எதிரி நாராஜன் என்பவர் குற்ற 481/2021 வழக்கில் சம்மந்தப்பட்ட தடய பொருளை தன் வசம் மறைத்து வைத்திருந்த 1,1/2 அடி நீளமுள்ள இரும்பு கம்பியை எடுத்து ஆஜர்செய்த அதை நான் அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். **(அந்த ராஜா என்ற நாகராஜன் கொடுத்த ஒப்புதல் வாக்கமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

**( அந்த 1,1/2 நீளமுள்ள இரும்பு கம்பிக்கான அத்தாட்சி அசாஆ 8 ஆக குறீயீடு செய்யப்படுகிறது ),**

12.15 மணிக்கு 2ம் எதிரியான சாந்தி என்ற சாந்தா என்பவர் தானாக வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பெண் காவலர் உதவியுடன் அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். 13.45 மணிக்கு 2ம் எதிரியான சாந்தி என்ற சாந்தா என்பவர் அவரது வீடு அமைந்துள்ள ஒத்தக்கடை மீனாட்சி காலனியில் வைத்து ஆஜர் செய்த குற்ற எண் 481/2021ன் தடய பொருளான 2 பவுன் தங்க கட்டி ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி மூலம் கைப்பற்றிறேன். சாந்தி என்ற சாந்த கொடுத்த வாக்குமுலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பின்னர் 16.30 மணிக்கு 3ம் எதிரியான கோபிகண்ணன் என்பவர் தானாக வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அதன்அடிப்படையில் 3ம் எதிரி

கோபிகண்ணன் என்பவரிடமிருந்து அவர் மறைத்து வைத்திருந்த குற்ற எண் 481/2021ன் வழக்கு சொத்தான சுமார் 5 பவுன் எடையுள்ள கேரளா மாடல் தங்க மாலை ஒன்றை ஆஜர் செய்ததை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி முலம் கைப்பற்றினேன். **(அந்ந 3ம் எதிரி கோபிகண்ணன் கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** பின்னர் 17.30 மணிக்கு எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துகளுடம் நிலையம் வந்து எதிரிகளை தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். வழக்கு சொத்துக்களை பின்னர் கைப்பற்ற வழக்கு சொத்தினை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். **(அந்த படிவம் 91 அசாஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** அந்த 1, 1/2 அடி நீளமுள்ள இரும்பு கம்பி படிவம் 91 மூலம் ஆஜர் செய்தேன். **(அந்த 1, 1/2 அடி நீளமுள்ள இரும்பு கம்பிக்கான படிவம் 91 அசாஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (அந்த இரும்பு கம்பியை அடையாளம் காட்டும் புகைப்படம் அசாஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது ). (அந்த 1, 1/2 அடி நீளமுள்ள கம்பி சாபொஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**இந்த வழக்கின் 1 மற்றும் 2வது எதிரிகளின் ஒப்புதல் வாக்குமுலத்தின் அடிப்படையில் 3ம் எதிரி கோபிகண்ணனை இவ்வழக்கில் எதிரியாக சேர்த்து சட்டப்பிரிவினை 454, 380 இதச பிரிவிலிருந்து, பிரிவு 454, 380, உ/இ 414 இதச ஆக சட்டமாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **(அந்த சட்டமாறுதல் அறிக்கை அசாஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ).** பின்னர் இத்துடன் எனது புலன்விசாரணை முடித்து எதிரிகள் 1மற்றும் 2 மீது இதச பின்னர் இத்துடன் எனது புலன்விசாரணை முடித்து எதிரிகள் 1மற்றும் 2 மீது இதச பிரிவு 454, 380 இதசன் கீழும், 3ம் எதிரி 414ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரிகள் ஆஜர்.

**1 மற்றும் 2 ம் எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை**

1 மற்றும் 2ம் எதிரியை எங்கு வைத்து கைது செய்தேன் என்றால் காளிகாப்பான் பிரிவு ஒத்தக்கடை – திருவாதவூர் சாலையில். அந்த இடத்தில் கடைகள் உள்ளது என்றால் சரிதான். சாட்சி ராஜா, மற்றும் விக்னேஷ் சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு அங்கு வந்தார்கள் என்றால் 08.02.2022ம் தேதி 12.30 மணிக்கு. 1 மற்றும் 2ம் எதிரியை பிடித்து வைத்திருந்த பின்னர், மேற்கூறிய சாட்சிகள் அங்கு வந்தார்களா அல்லது அவர்கள் வந்த பின்னர் 1 மற்றும் 2 ம் எதிரியை நான் பிடித்தேனா என்றால் பார்வை மகஜர் சாட்சிகள் அங்கு எதிரிகளை பிடிப்பதற்கு முன்னரே இருந்தார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவ இடத்திற்கு இருந்த கடைகள் உள்ளவர்களிடம் நான் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். எதிரிகளை கைது செய்த இடத்தில் என்ன, என்ன பொருட்களை நான் கைப்பற்றினேன் என்றால் சம்பவ இடத்தில் 1,1/2 அடி நீளமுள்ள இரும்பு கம்பியை கைப்பற்றினேன். மேற்கூறிய 1,1/2 அடி நீளமுள்ள கம்பிக்கான அத்தாட்சியை எங்கு வைத்து தயார் செய்தேன் என்றால் கைது செய்த இடத்திலேயே வைத்து தயார் செய்தேன். நான் கம்பியை கைது செய்த இடத்தில் கைப்பற்றவில்லை, அதற்கான அத்தாட்சியும் அங்கு வைத்து தயார் செய்யவும் இல்லை, ஒப்புதல் வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

2) 1 மற்றும் 2ம் எதிரியின் கைது செய்த பின்னர் 2ம் எதிரியின் வீட்டிற்கு சென்றேன், 1 மற்றம் 2ம் எதிரியின் வீடு எங்கு உள்ளது என்றால் ஒத்தக்கடை மீனாட்சி காலனியில் அமைந்துள்ளது. அந்த வீடு ரோட்டிற்கு அருகே உள்ளது என்றால் இல்லை. 1 மற்றும் 2 ம் எதிரியின் வீடு தனி வீடா என்றால் சரிதான். 1 மற்றும் 2ம் எதிரியின் வீடு ரோட்டின்

அருகே உள்ள 4, 5 வீடுகள் உள்ள காம்பவுண்ட் வீடு என்றால் சரியல்ல. அவர்கள் குடியிருந்த வீடு வாடகை வீடு என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை அந்த வீட்டிலிருந்துதான் கைப்பற்றப்பட்டதா என்றால் எதிரிகள் எடுத்து ஆஜர் செய்தார்கள். அந்த வீட்டின் உரிமையாளர் சுந்தரியை நான் விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்யவில்லை.

3) நான் சென்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்திற்கு சென்று பொருட்களை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் 1 மற்றும் 2ம் எதிரிகள், 3ம் எதிரியிடம் கொடுத்து வைத்திருந்த 5 பவுன் எடை உள்ள கேரளா மாடல் தங்க மாலையை நான் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் 40 கிராம் எடை உள்ள நகை தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அசாஆ 8 ஆன அத்தாட்சியில் ஒரு கம்பி கைப்பற்றியதாக குறிப்பிட்டுள்ளேன் ஆனால், படிவம் 91ன் சிறு துண்டு ஒன்று, மற்றும் துகள்கள் ஒன்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்கூறியதை எழுதியது நான்தான் என்றால் சரிதான். நான் சரிவர புலன்விசாரணை செய்யாமல் இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளேன், 1 மற்றும் 2ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன தேதியில், சம்பவம் எதுவும் நடைபெறவில்லை, எதிரிகளிடமிருந்து பொருட்களை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளிடமிருந்து அவர்களது நகைகளை நான் பெற்றுக்கொண்டேன், இந்த வழக்கின் கூறப்பட்டுள்ள நகைகள் எதிரிகளுடையது என்றால் சரியல்ல. எதிரிகள் வழக்கில் குறிப்பிட்டுள்ள நகைகள் சம்மந்தமாக ரசீதுகளை எதிரிகளிடமிருந்து

பெற்று, அதன்பின்னர் நகைகளை உருக்கி தங்க கட்டியாக இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளை கைது செய்த பின்னர் நீதிமன்றத்தில் ஒப்படைக்காமல் சட்ட விரோதமாக வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை, சரிவர புலன்விசாரணை செய்யமாமல் தவறுதலாக எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**3ம் எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

3ம் எதிரியை 07.08.2021 முன்னர் மாலை 06.30 மணிக்கு நேதாஜி ரோட்டில் உள்ள அவரது நகை கடையிலிருந்து சிறப்பு சார்பு ஆய்வாளர் குமரகுரு மற்றும் 2 காவலர்களும் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள் என்றால் சரியல்ல, 09.08.2021ம் தேதி 1 மற்றும் 2ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மதியல் 03.45 மணிக்கு ஜெய்ஹிந்புரம் வீரகாளியம்மன்கோவில் அருகே நகை பட்டறை தொழில் செய்துவரும் 3ம் எதிரியான கோபிகண்ணனை கைது செய்தோம். கோபிகண்ணனை கைது செய்தபோது அங்கு நான் சென்றேன் என்றால் சரிதான். 3ம் எதிரியின் வீடு எந்த திசையில் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது வாகனத்தில் ரோட்டில் நிறுத்திவிட்டு உள்ளே சென்று கைது செய்தேன் என்றால் சரிதான். அவர் குடியிருக்கும் தெரு நேரே செல்லும் தெரு என்றால் சரிதான். 07.08.2021ம் தேதி 3ம் எதிரியை காவலர்கள் டெம்போ வேனில் அழைத்து சென்றது 3ம் எதிரியின் கடையில் CC TVல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இதுசம்மந்தமாக 07.08.2021ம் தேதியிலிருந்து 10.08.2021ம் தேதி வரை சுமார் 72 மணிநேர சட்டவிரோதமாக காவல் நிலையத்தில் வைத்திருந்ததற்காக மாநில மனித உரிமை ஆணையத்தில் இது

சம்மந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளது, அந்த வழக்க எண் SHRC 11281/2021 என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த 3 நாட்கள் சட்ட விரோதமாக 3ம் எதிரியை எனது காவல் நிலையத்தில் வைத்திருந்தபோது 3ம் எதிரியின் அக்கா மகனையும் காவல் நிலையத்தில் வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. 3ம் எதிரியின் அக்கா மகன் அணிந்திருந்த 6 கிராம் தங்க மோதிரம், 3ம் எதிரி அணிந்திருந்த 8 கிராம் கை சங்கிளி, 16 கிராம் எடையுள்ள கழுத்து சங்கிலி, 6ம் கிராம் எடையுள்ள மோதிரம் ஆகியவற்றை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தபோது நான் கைப்பற்றினேன் என்றால் சரியல்ல.

2) 3ம்எதிரி 1 மற்றும் 2 எதிரிகள் தன்னிடம் 06.02.2022ம் தேதி 2,1/2 பவுன் தங்க நகைகளை கொடுத்து 3 பவுன் புதிய தங்க நகைகளை கேட்ட விவரத்தை என்னிடம் சொல்லியும் நான் 3ம் எதிரியிடம் 50,1/2 பவுன் கேட்டேன் என்றால் சரியல்ல. மேற்கூறிய 50,1/2 பவுன் நகை கொடுக்காததால்தான் 3ம் எதிரியை அனைத்து வழக்கிலும் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 3ம் எதிரியிடமிருந்து கூடுதல் நகைகளை கைப்பற்ற வேண்டும் என்பதற்காக பொய்யாக அனைத்து வழக்கிலும் 3ம் எதிரியை சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு மற்றும் இதனுடன் மற்ற 3 வழக்குகளிலும் உள்ள வழக்கு சொத்துக்களை 3ம் எதிரி பெறவில்லை, இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ளத அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 3ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட அவரது நகைகளை வைத்தே இந்த வழக்குகளில் எதிரியாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

3) 3ம் எதிரி கோபிகண்ணன் நகை கடை உரிமையாளர், அவரது கடையின் பெயர் NSK ஜிவல்லர்ஸ், அவர் நகை பட்டறை வைக்கவில்லை

என்றால் எனது விசாரணையில் அவர் நகை பட்டறை நகை தொழில் செய்து வருவதாகவும், ஜெய்ஹிந்த்புரத்தில் குமரன் நகை கடை தொழில் செய்து வருவதாகவும் தெரிந்து கொண்டேன். சாட்சிகளின் மறுவிசாரணையில் வீட்டு கதவோ, மற்றும் பீரோ கதவு உடைக்கப்பட்டதாக சொல்லவில்லை என்றால் நான் மறுவிசாரணை செய்யவில்லை.